# ஆயிர வைசியன்

சமூக மாத இதழ்

ஆசிரியர் : டாக்டர். A. S. கணேசன்




சிறந்த பேச்சாளர்
அவரது குரலே
பலநூறுபேர்களைக்
கட்டி ஆளும்
வல்லமை மிக்கது,
சிம்மக்குரலோன்

தமிழ்நாடு ஆயிர வைசியர்
சங்கத்தின் மாநிலத்
துணைத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய

இணைப்பு இதழ்

## தெய்வத்திரு.

# கோவை எஸ். ராஜன்

## அவர்களுக்கு புகழஞ்சலி


அன்பு - 42 / ஏப்ரல் 2021 / ஒளி - 10


'ஒற்றுமையே பலம்; மனித நேயமே வெற்றி'

www.ayiravaisya.com

## எல்லோருக்கும் வணக்கம்.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்க மாநில துணை தலைவர் திரு. கோவை எஸ். ராஜன் அவர்களின் மறைவு அதிர்ச்சியாக இருந்தது. அவருடைய மறைவிற்கு நேரடியாக அஞ்சலி செலுத்த முடியவில்லையே என்று வருந்துகிறேன். கடந்த ஒரு வருட காலமாக, கொரானா தொற்று பரவ ஆரம்பிக்கத் தொடங்கியது முதல் நம் மக்களுக்கு நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கிற விசயம் இதுதான். 'கொரானா தொற்று வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்; வருமுன் காப்பது நல்லது, எளிது; கொரானா தொற்று

# தெய்வத்திரு. கோவை. எஸ். ராஜன் அவர்களுக்கு, மாநில தலைவரின் புகழஞ்சலி உரை

பரவாமலிருக்க சமூக இடைவெளியை விடாது கடைப்பிடிக்க வேண்டும்; அடிக்கடி கைகளைக் கழுவ வேண்டும். 'பயப்பட வேண்டாம்; முன்னெச்சரிக்கை நல்லது'

நமது மக்கள் அனைவரும் தத்தமது வீட்டில் உள்ள வயதானவர்களைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். முக்கியமாக அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள்; ஒரு தடுப்பூசி அல்ல, அரசு அறிவுறுத்தும் போதிய இடைவெளியில் இரண்டாவது தடுப்பூசியும் போட்டுக்கொள்ளுங்கள். சங்கம் முக்கியம்; சமூகம் அதிமுக்கியம்; மக்கள் பணிகள் அவசியம்; அதற்கு சேவை செய்ய, நாம் நமது உடல் நலத்தில் அக்கறை கொள்வது மிக மிக முக்கியம். இப்படி கொரானா தொற்றுக்கு நமது மூத்த தலைவரை பறிகொடுத்துள்ளது, வருத்தமடையச் செய்கிறது. திரு. கோவை எஸ். ராஜன் அவர்கள் சாதாரணத் தொண்டனாக தனது வாழ்வை ஆரம்பித்து, மாநில அளவில் துணைத் தலைவராக வளர்ந்தது அவரது உழைப்பையும், மக்கள் மேல் அவர் கொண்ட அக்கறையையும், சக தலைமை நிர்வாகிகளுடன் அவர் கொண்ட நேசத்தையும், சமூகப் பணிகளில் அவர் கொண்ட விடாமுயற்சியையும், உறுதியையும் காட்டுகிறது. நாங்கள் எப்போது சந்திக்கும் போதும், 'மாநாடு நடத்தவேண்டும்' என்பது குறித்தே வலியுறுத்துவார். 'ஆயிர வைசியர் மாநிலம் தழுவிய மாநாடு நடத்த வேண்டும்; நம்முடைய பலத்தை, யாவரும் உணரும் வண்ணம் சிறப்பாக, பெரியதாகச் செய்ய வேண்டும்' என்பார். எப்போதும் சமுதாய நன்மைகள் பற்றியேதான் பேசுவார். உணர்ச்சிப்பூர்வமாக, உள்ளன்புடன், உண்மையாக இந்த சமுதாயத்தை முன்னேற்றுவது குறித்துதான் உரையாடுவார்.

அவர் இந்த ஆயிர வைசியர் சங்கத்திற்கும், சமுதாயத்திற்கும் செய்த பணிகளை யாரும் மறுக்கவும் முடியாது; அவற்றை மறக்கவும் முடியாது. ஒரு சிறந்த மூத்த தலைவராக, அவர் எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். கடந்த ஆறு மாத காலத்தில் திருமடத் தேர்தல் விசயங்களுக்காக நாங்கள் அடிக்கடி உரையாட நேர்ந்தது. சிறந்த இராஜ தந்திரியாக எங்கு துணிச்சலாகப் பேச வேண்டுமோ அங்கு துணிச்சலாகவும், எங்கு தணிந்து போக வேண்டுமோ அங்கு தணிந்தும், எங்கு அமைதியாக இருக்க வேண்டுமோ அங்கு அமைதியாகவும் இருப்பார்.

நாம் அனைவரும் அன்னார் அவர்கள் நமது ஆயிர வைசிய சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகளுக்காக, அவருக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும். திரு. கோவை. எஸ். ராஜன் அவர்களது இறுதிக் காலத்தில், அவருக்குத் துணையிருந்த மாநில செயலர் டாக்டர். ஜெயராமன் அவர்களுக்கும், திரு. சௌந்தரராஜன் மற்றும் திரு. சிவஞானம் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றி.

அன்புடன்,
**டாக்டர். ஏ. எஸ். கணேசன்**
மாநில தலைவர்

## அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்திற்கு அமைந்த சிறந்த தளபதிகளுள் ஒருவர் என மாநில துணைத் தலைவர் தெய்வத்திரு. கோவை ராஜன் அவர்களைச் சொல்லலாம். சிறந்த பேச்சாளர்; அவரது குரலே பலநூறுபேர்களைக் கட்டி ஆளும் வல்லமை மிக்கது. சிம்மக்குரலோன். அவர் நம்முடன் இருப்பதே நம் மனதிற்கு பெரிய பலத்தைத் தரும். அவர் பேச்சாளர் மட்டுமல்ல, சமூகப் பணி என்று வந்துவிட்டால், அனைத்து தரப்பு மக்களோடும் இணைந்து, வேகமாகவும் அதே சமயம் சிறப்பாகவும் செயல்படும் செயல் வீரரும் கூட. யாருக்கும் அஞ்சாமல் தனது கருத்துகளைத் துணிவாக எடுத்துரைப்பார்.

**'தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு'.** (குறள் 634)

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் ஆகியவற்றில் வல்லவர் அமைச்சர் என வள்ளுவர் பெருந்தகையின் குறளுக்கேட்ப, ஆயிர வைசிய சங்கத்தின் அனைத்து செயல்களிலும் துணை நின்றவர். சங்க முன்னேற்றத்திற்கு பல நல்ல ஆலோசனைகள் தந்து வழிகாட்டியவர். கோவை ராஜன் அவர்கள், எனது தந்தையார், தமிழ்நாடு ஆயிர வைசிய சங்க மாநில முன்னாள் தலைவர், திருக்குறள் செம்மல், தெய்வத்திரு. ந. மணிமொழியனார் அவர்களின் நெருக்கமான நட்பிற்குரியவர். எங்களது வீட்டிற்கு சிலமுறை வந்திருக்கிறார்.

திருக்குறள் செம்மல் அவர்களின் 70ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மதுரையில் சிறப்பாக நடைபெற்றது. அதையொட்டி, திருக்குறள் செம்மலைக் கௌரவிக்கும் வகையில் கோவையில் நடந்த விழாவை, கோவை மாவட்டத் தலைவர் திரு. எஸ். ராஜன் அவர்களும், பொருளாளர் திரு. BP. ஜெகநாதன் அவர்களும் முன்னின்று சிறப்பாக நடத்தினார்கள்.

கோவையில் நடைபெற்ற ஐம்பெருவிழா மற்றும் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப் பேட்டையில் நடந்த ஆயிர வைசியர் சங்க மாநாடு ஆகியவற்றை திரு. கோவை ராஜன் அவர்கள் சிறப்புற நடத்தினார்கள். அன்னாரின் மறைவு, ஆயிர வைசிய சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆன்மிகப் பணிகளும் குறிப்பிட்டுச் சொல்லுமளவு சிறப்பு வாய்ந்தவை.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தெய்வத்திரு. கோவை. எஸ். ராஜன் அவர்களுக்கு, டாக்டர். அனுராதா கணேசன் அவர்களின் புகழஞ்சலி உரை

**திருக்குறள் செம்மல் அவர்களின் குடும்பத்தினர் அனைவரின் சார்பாகவும் திரு. கோவை. எஸ். ராஜன் அவர்களுக்கு புகழஞ்சலி வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன்.**

**- டாக்டர். அனுராதா கணேசன்**
அலைபேசி செயலி தலைமை நிர்வாகி



# எங்கு சென்றீர்கள் நண்பரே...

எங்கு சென்றீர்கள் நண்பரே, கோவை எஸ் ராஜன் தமிழகத்தின் ஆயிர வைசியர் உள்ளங்களில் எல்லாம் நன்கு அறிமுகமான பெயர். இரண்டு சமுதாய மாநாடுகளை தனி மனிதராக நடத்தி ஆயிரவைசிய சமுதாயத்தின் பெருமையை நாடறியச் செய்த நண்பர். மாநாட்டிற்கு என்னை அழைத்ததன் மூலம் அறிமுகமாகி இறுதிவரை என் உள்ளத்தில் இடம் பிடித்த பாசம் நிறைந்த நண்பர். கருத்தொற்றுமையோடு இருந்தபோதும் கருத்து வேறுபாடுகளோடு இருந்தபோதும் நட்பின் கண்ணியத்தை எப்படி காக்க வேண்டும் என்று தாங்கள் தான் உலகுக்கு எடுத்துக் காட்டினீர்கள். ஆயிர வைசியருக்கு ஒரு ஆபத்து என்றால் முதலில் உதவிக்கரம் நீட்டியது தங்களுடைய கரங்களே. ஆறுதல் கூறி கண்ணீரை துடைத்ததும் தங்களுடைய கரங்களே.

என் உள்ளம் எல்லாம் நிறைந்திருக்கிற அன்புத் தலைவர் திருக்குறள் செம்மல் மணிமொழியனார் அவர்களே என்று தாங்கள் மேடைகளில் முழங்கும் போதெல்லாம் சமுதாய மேன்மையையும் ஒற்றுமையையும் தாங்கள் விவரித்த விதமும் கூட்டத்தை தங்களுடைய சொல்லாற்றலால் கட்டிப்போட்டீர்கள். சமுதாய ஒற்றுமைக்காகவும் நன்மைக்காகவும் தாங்கள் செய்த தியாகங்கள் அளப்பரியவை. ஆலை தொழிலாளியாக வாழ்க்கையைத் துவங்கி தொழிற்சங்க தலைவராக உயர்ந்து சமுதாய தலைவராக பரிணமித்து அரசியலில் உயர்ந்த அந்தஸ்தை பெற்ற தங்களது உழைப்பு ஆயிர வைசிய சமுதாயத்தின் வரலாற்றுச் சுவடுகள். திருக்குறள் செம்மல் மறைவிற்கு பிறகு சமுதாய தலைவராக வேந்தரை தேர்ந்தெடுத்தது அதற்கு தீர்மானத்தை தாங்கள் முன்மொழிந்தது வரலாற்று நிகழ்வு.

திருக்குறள் செம்மலின் பாசமிகு தளபதியாக விளங்கிய தங்களோடு இணைந்து பணியாற்றிய நாட்கள் என் வாழ்நாளில் சிறப்பு மிகுந்த நாட்கள். புறங்கூறாமை, விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மை, குறை கூறியவர்களையும் மன்னிக்கும் பெருந்தன்மை இவைகள் எல்லாம் தாங்கள் எனக்கு கற்றுக்கொடுத்த பாடங்கள். எப்போதும் சிரித்த முகத்தோடு நண்பர் குழாம் புடைசூழ வலம் வந்த தங்களுடைய மறைவு சமுதாயத்திற்கு பேரிழப்பு. நான் ராஜன் பேசுகிறேன் சார் என காலையில் என்னை எழுப்பி விடும் முதல்குரல் தங்களுடையது. நான் படுக்க போகிறேன் நீங்களும் ஓய்வெடுங்கள்,

சரியான நேரத்தில் ஓய்வு எடுங்கள் என்று இரவு ஒன்பது முப்பது மணிக்கு ஒலிக்கும் குரலும் தங்களுடையது தான். இடைப்பட்ட நேரத்தில் என்னோடு நீங்கள் பேசியதெல்லாம் சமுதாய மேன்மை பற்றியதே, எப்படி எல்லாம் நம் சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தாங்கள் கனவு கண்டீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் அவை அனைத்தும் இன்று பொய்யான உறவுகள் நிறைந்த இந்த உலகில் நிராசையாக போய்விட்டது. மதுரையில் வழக்கறிஞர் செந்தில் அவர்கள் இல்ல திருமண விழாவில் நாம் சந்தித்ததே நிறைவான சந்திப்பு ஆக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. மருத்துவமனையில் தாங்கள் அனுமதிக்கப்பட்ட போது, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளேன் என்று என்னிடம் அலைபேசியில் தாங்கள் கூறியபோது நீங்கள் விரைவில் நலம் பெற்று வருவீர்கள் என்று தங்களுக்கு ஆறுதல் கூறியது எல்லாம் கனவாகிவிட்டது.

தங்களுடைய குமாரர் என்னை அழைத்து நாங்கள் யாரும் வெளியில் வரக் கூடிய சூழ்நிலையில் இல்லை நாங்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளோம். செய்வதறியாது திகைக்கிறோம், எதுவானாலும் நீங்கள் முடிவு எடுங்கள் என்று கூறிய பொழுது இப்படி ஒரு நிலை வரும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. தலைவர் இடத்திலே செய்தியை கூறிவிட்டு தினந்தோறும் மருத்துவமனையின் நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு தங்கள் உடல்நிலை விசாரித்தபோது வந்த தகவல்கள் ஆறுதல் அளிக்காத போது, எப்போதும் தங்களுடன் உடன்பிறவா சகோதரர்கள் ஆக இருக்கும் சிவஞானத்திடமும், சௌந்தர்ராஜனுடன் பேசியபோது அவர்கள் கதறிய கதறல் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தலைவரே மீண்டு வாருங்கள் என்று அவர்கள் தங்கள் இடத்திலே செல்போனில் கூறியதும் தாங்கள் கையசைத்தது முதல், கடைசி நிகழ்வுகள். அடுத்து நடந்தது எல்லாம் இறைவனின் விருப்பங்கள். வாழ்நாளெல்லாம் எந்த உழைப்பாளிகளுக்கு சேவை செய்தீர்களோ அவர்களால் மட்டுமே தங்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த முடிந்தது. சிவஞானமும், சௌந்தர்ராஜனும் வாழ்நாளில் நீங்கள் சேர்த்த நட்பிற்கு அடையாளமாக அன்று திகழ்ந்தார்கள். என்னால் ஒரு பார்வையாளனாக மட்டுமே என் சக்திக்கு உட்பட்ட செயல்களால் தங்களுக்கு இறுதிக் கடன் செய்ய முடிந்தது. சங்கத்திற்காக உழைத்த தங்களுக்கு சங்கம் திருப்பி செலுத்திய நன்றி இதுவே.

ஒரு உழைப்பாளியின் உடல் எந்தவித மரியாதையும் இன்றி மானசீகமாக சங்க கொடி போர்த்தி அக்னி தேவனால் ஆட்கொள்ளப்பட்டு இறையோடு கலந்தீர்கள். சமூக சேவையின் மீது தாங்கள் கொண்டிருந்த அளவு கடந்த பற்று தங்களை எங்களிடமிருந்து பிரித்துவிட்டது என்பதுதான் நிதர்சனம். தங்கள் மீது பாசத்தை பொழிந்த உற்றார் உறவுகள் நண்பர்களை எல்லாம் விட்டு **எங்கு சென்றீர்கள் நண்பரே.**

ஆழ்மனதில் நீங்கள் எங்களுடனேயே
இருக்கிறீர்கள், சமுதாய
முன்னேற்றத்திற்காக தாங்கள்
கண்ட கனவுகளை ஒற்றுமையுடன்
செயல்படுத்துவது தான் நாங்கள்
உங்களுக்கு செலுத்தும் அஞ்சலி.

**- டாக்டர். மா. ஜெயராமன்**
*மாநில செயலாளர்*

## தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் கோவை எஸ் ராஜன் ஐயா அவர்கள் பற்றி அவர்தம் குடும்பத்தார் ஆயிர வைசிய இதழுக்கு அளித்த பிரத்தியேக கட்டுரை...



அன்புடையீர் வணக்கம்,

**நான் கனத்த மனதுடன் உங்களிடம் பகிர விரும்புகிறேன் எங்கள் மனதில் கலந்த மா மனிதனைப்பற்றி...**

இந்தியா விடுதலை பெற்ற ஆண்டு 1947 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தோன்றிய முத்து திரு எஸ். ராஜன் அவர்கள். தன் தந்தையின் வழிகாட்டுதல் இன்றி, பல இன்னல்களைத்தாங்கி தைரியத்தின் திருவுருவாய் வளர்ந்தவர். பள்ளி காலம் முதலே சமூக நலனில் அக்கறை கொண்ட இவர் தனது பத்தாம் வகுப்பில் மாணவர் குழு தலைவர் பொறுப்பை ஏற்றார். பத்தாம் வகுப்பு வரை படித்த இவர், குடும்ப சூழ்நிலை காரணமாக வேலைக்கு செல்லும் நிலைமை ஏற்பட்டது. இருப்பினும் சமூகத்தின் மீதும், தமிழ் மீதும் கொண்ட பற்றின் காரணமாக ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் இவர். அன்று நடந்த தொழில்துறை புரட்சியின்போது உருவெடுத்த தொழிற்சாலையில், அடிப்படை ஊழியனாக பணிக்கு சேர்ந்தார். தன் வேலையை செவ்வனே தொடர்ந்து, தன் சக ஊழியர்களுடன் நட்புறவு பூண்டு, அவர்களின் குழு தலைவராக நியமிக்கப்பட்டார். அவரவர் துன்பத்தை வெளியில் சொல்ல தயங்கிய பலருள், தைரியத்தை கையில் கொண்டு தங்கள் தேவைகளை உரத்த குரலில் வெளிக்கொண்டு வந்தவர் இவர். கடின உழைப்பும் மன தைரியமும் கொண்டு தன் வாழ்வின் படிகளை வெற்றி படிகளாக மாற்றியவர் இவர். சுயமாக தொழிற்சாலையை நிறுவி அதனுடன் தொழிலாளர் நலச் சங்கத்தின் பொறுப்பாளராக விளங்கி நாட்டுக்கும் வீட்டுக்கும் செவ்வென கடமையாற்றியவர் இவர். அவர் இம்மண்ணில் வாழ்ந்த 74 ஆண்டுகள் அவர் வகித்த பதவிகளோ பல. நல்ல மகனாய் இரு, நல்ல கணவனாய்

ஒரு நல்ல மனிதரை, கொள்கைப் பிடிப்புள்ளவரை, திருக்குறள் செம்மலின் இனிய நண்பரை, தன் சமூகத்திற்கு அயராது உழைத்த துணிச்சல் மிகுந்தவரை இழந்து விட்டோம். அவர் குடும்பத்திற்கு எவ்வளவு ஆறுதல் கூறினாலும் அவர் இழப்பை ஈடுசெய்ய முடியாது. காலப்போக்கில்தான் மாறும். அவரது மக்கள் செல்வங்கள் தங்களது தாயாரும் திரு. கோவை ராஜன் அவர்களின் துணைவியாருமான திருமதி.விஜயலக்ஷ்மி அம்மாவிற்கு ஆறுதலாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**- கமலா மணிமொழியன்**

இரு என்று அறிவுறுத்தி பிள்ளைகளின் தகப்பனாய், அவர்களின் நாயகனாய், பேரக் குழந்தைகளின் பிடித்தமான தாத்தாவாய், தன் கடமையை இப்படித்தான் ஆற்ற வேண்டும் என்று அனைவருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் அவர். தனக்காகவும் தன் இனத்துக்காகவும் ஆயிரவைசிய நலச்சங்கத்தின் பொறுப்பாளராக திகழ்ந்தார். அதன்மூலம் தன் இனத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை அரசிடமிருந்து பெற, முடிந்தவரை போராடினார். அவர் நடத்திய கூட்டங்கள், அவர் பேசிய மேடைகள், அவர் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். அப்படிப்பட்ட எங்கள் வாழ்வின் அரிய பொக்கிஷத்தை பறிகொடுத்த வருடம் இவ்வருடம். கொடிய நோய் தொற்று பரவியது சைனாவில்; அதன் தடம் பதித்தது இந்தியாவில்; திருடிச்சென்றதோ எங்கள் வாழ்வின் ஆதாரத்தை. கனவில் கூட நினைக்கவில்லை இப்படி ஒரு நோயால் உங்களை இழப்போம் என்று. உம்மைப்போல ஒரு உறவை – தகப்பனை – தலைவனை மீண்டும் அடைய என்ன தவம் செய்வோமோ புரியவில்லை எவர்க்கும். எங்கள் வாழ்நாள் முழுவதும் ஆறாத வடுவாய் திகழும் உங்களை பிரிந்த இத்தருணம். எங்கள் சிரிப்பிலும் கண்ணீரிலும் இன்பத்திலும் துன்பத்திலும் தனிமையிலும் இன்னல்களிலும் எண்ணி பார்க்கக்கூடும் ஒரே உறவு நீங்கள் தான். நீங்கள் உரைத்த பொன்மொழிகளை மனதில் ஏந்தி வாழ்வோம் இனி ஒவ்வொரு நாளும். இவ்வுலகை விட்டு நீங்கள் மறைந்திருக்கக் கூடும் ஆனால் எங்கள் உள்ளத்தில் எங்கும் நீங்கா சுவடுகளை விட்டுச் சென்ற நீங்கள் வாழ்வீர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்.

– ஆயிர வைசிய சமுதாயத்தின் மீது என்றும் மாறாத பற்றுடன் கோவை எஸ்.ராஜன் குடும்பத்தினர்.

## கோவை ராஜன் இரங்கல் செய்தி

கோவை ராஜன் 10 ஆண்டுகளுக்கு முன்பு நமது தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்தில் சேவை செய்ய இணைந்தார். திருக்குறள் செம்மலோடு இணைந்து பணி செய்தார். திருப்பூர், கோவை மாவட்டத்தில் நம்மவர் வீடுகளுக்கு நேரடியாக சென்று ஜனத்தொகை கணக்கு, மாணவர்கள் படிப்பு, மக்களின் நிலை, தொழில்கள் பற்றி நேரில் தெரிந்து கொண்டனர். அடிக்கடி கூட்டங்கள் போட்டு எல்லோரையும் ஒன்று சேர்த்தார். வருடா வருடம் கூட்டம் போட்டு கல்வி உதவி தொகை, பாராட்டுக்கள் செய்தார். நெருஞ்சிப்பேட்டை மடத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெற தொடர்ந்து பாடுபட்டார். அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடுகள் போல சமூக மாநாடுகள் பல நடத்தி மாநிலத்தில் உள்ள சமூக பெரியோர்கள் அனைவரையும் அழைத்து ஒற்றுமைபடுத்தினார். சமூக முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு அயராது செயல் பட்டார். மதுரையில் வக்கீல் செந்தில்குமார் மகள் திருமணத்தில் ராஜன் அவர்களோடு சமூக விஷயங்கள் பற்றி பேசிக்கொண்டு இருந்தது தான் அவருடன் ஆன கடைசி சந்திப்பு. சமூக தொண்டர் ஒருவரை நாம் இழந்து விட்டோம் என்று எண்ணும் போது மிகவும் வருத்தமாக உள்ளது. அவரை போல நாமும் தொண்டு செய்து சமூகத்தை உயர்த்துவது தான் நாம் அவருக்கு செய்யும் மரியாதையாகும். வாழ்க ராஜன் புகழ்.

**இப்படிக்கு M R கோபி,**

செயலாளர், தஞ்சை மாவட்ட ஆ.வை.சங்கம்.

**தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்க மாநில துணை தலைவர் தெய்வத்திரு கோவை ராஜன் அவர்களுடைய இறப்பு செய்தி நம்பமுடியாத செய்தியாக இருந்தது.**

> "காங்கிரஸ் கட்சியில் ஆரம்பத்தில் தொழில் சங்கத்தில் தனது வாழ்க்கையை துவக்கியதாக அடிக்கடி கூறி கொங்கு தமிழில் உண்மையான காங்கிரஸ் கட்சிகாரராக வாழ்ந்து வந்தார். மறைந்த முன்னாள் தலைவர் திரு மணிமொழியனார் மீது அளவு கடந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார். அன்னாருடன் சுமார் 15 ஆண்டு காலம் ஆயிர வைசியர் சங்கம்,நெரிஞ்சி பேட்டை மடம் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளில் பல முறை நானும் செயலாளர் திரு ஜெயராமன் அவர்களும் பல இடங்களில் பல முறை சந்தித்து கலந்துரையாடியதை என் உயிர் உள்ளவரை மறக்க முடியாது. அவற்றில் சிலவற்றை நினைவு கூறுவது மன ஆறுதலாகும். பொள்ளாச்சி மாநாட்டை எவ்வளவு சிறப்பாக நடத்தி தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்திற்கு பெருமை சேர்த்தார்!

நெருஞ்சி பேட்டை மடம் சம்மந்த மாக பலமுறை மடத்திற்கு சென்று மடத்தின் பிரச்சனைகளை தீர்க்க முயற்சி மேற்கொண்டது, திரு முத்துசாமி செட்டியார் வகையறா மீது மடாதிபதி பல வழக்குகள் போடும்போது அதனை தடுத்து நிறுத்த சென்னை சென்று முன்னாள் முதல்வர்,அமைச்சர்கள், காவல் துறை உயர் அதிகாரிகள் மற்றும் பல அதிகாரிகளை சந்தித்தது, மடாதிபதி தூண்டுதலால் மாநில செயலாளர் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாரில் நாங்கள் இருவரும் அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த வாக்கு மூலம் மற்றும் அன்னாருடன் இணைந்து மடம் சம்மந்தப்பட்ட நிகழ்வுகளில் நானும் செயலாளரும் மற்றும் சங்க முன்னணி நிர்வாகஸ்தர்களும் இணைந்து செயல்பட்ட பொன்னான நிகழ்வுகளை சொல்லிக்கொண்டு போனால் நேரம் போதாது.

சேலம் அடிவாரத்தில் கடந்த ஜனவரியில் நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் மடம் சம்மந்தமாக டிரஸ்டு போர்டு அமைக்க அன்னார் மேற்கொண்ட சமரச முயற்சியும் நாம் எவ்வாறு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுமென்று எடுத்துக்கூறிய விதம் பற்றி எடுத்துரைத்த விதம், சங்கத்தின் மீது அவர்கொண்ட பற்றை அனைவரையும் அறியவைத்தது. எனது மகளின் திருமண வரவேற்பு மற்றும் திருமண நிகழ்ச்சியில் உளப்பூர்வமாக கலந்து கொண்டது நானும் என் குடும்பமும் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். இனிமேல் வாழ்நாளில் எப்போது அன்னாரை சந்திக்கப்போகிறோமோ... அவரது பிரிவு அன்னாரின் குடும்பத்திற்கும்,சங்கத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஈடுசெய்ய முடியாத நினைவுகளுடன் பெரும் துயரத்துடன்...

**- P. N. செந்தில் குமார், வழக்கறிஞர்.**
**ஆயிர வைசியர் வழக்கறிஞர் பிரிவு, பரமக்குடி ஆயிய வைசிய சபை,**
**பரமக்குடி ஆயிர வைசிய இளைஞர் சங்கம்,**
**ராமநாதபுரம் மாவட்ட ஆயிர வைசிய சங்கம்.**

# தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தெய்வத்திரு. கோவை எஸ் ராஜன் அவர்களுடனான பயணம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம், சின்ன கலைய முத்தூர் கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த கோவை எஸ்.ராஜன் அவர்கள் பத்தாம் வகுப்பிற்குப் பிறகு குடும்ப சூழ்நிலையால் மேலே படிக்க இயலாத காரணத்தால் கோவையில் பஞ்சாலை தொழிலாளியாக தனது வாழ்க்கையை துவக்கினார். துவக்கத்தில் இருந்தே நேர்மறை சிந்தனைகளை கொண்டவராகவும் எந்த ஒரு பிரச்சனையையும் அறிவுபூர்வமாக அணுகும் திறனும் பெற்றவராக விளங்கினார். அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சி மீது கொண்ட அதி தீவிர ஈடுபாடு காரணமாக காங்கிரஸ் கட்சி நடத்திய பல போராட்டங்களில் பங்கேற்று சிறைவாசம் அனுபவித்துள்ளார். காங்கிரஸ் கட்சி மீது கொண்ட ஈடுபாடு காரணமாக தனது மகளுக்கு இந்திரா என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். மேலும் பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் மாநில அளவில் தலைவராக இருந்த தெய்வத்திரு செங்காளியப்பன் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். இதன் காரணமாக கோவை மாவட்டத்தில் பஞ்சாலை தொழிற்சங்க தலைவராக படிப்படியாக உயர்வு பெற்றார். கோவை மாவட்ட பஞ்சாலை தொழிற்சங்கத் தலைவராக இருந்த இவரது காலகட்டத்தில் தொழிலாளர் பிரச்சனை காரணமாக இயங்காமல் இருந்த பல பஞ்சாலைகளை தொழிற்சாலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாதபடி தொழிலாளர் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்து தொழிற்சாலைகள் இயங்க முழு முயற்சி எடுத்தார்.

இதன் காரணமாக இயங்கவே முடியாத நிலையிலிருந்த பல தொழிற்சாலைகள் சிறப்பாக இயங்கின. பல ஆயிரம் தொழிலாளர்களும், சில நூறு முதலாளிகள் குடும்பத்தாரும் இவரை மனமார வாழ்த்தினார்கள். இவர் தொழிற்சங்க தலைவராக இருந்த காலகட்டத்தில் எந்த ஒரு தொழிலாளியோ அல்லது முதலாளியோ இவரது செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டதாக கூற முடியாத அளவுக்கு சிறப்பாக செயல்பட்டு அனைவரின் நன்மதிப்பை பெற்ற ஒரே தொழிற்சங்க தலைவராக கோவை எஸ்.ராஜன் ஐயா அவர்கள் திகழ்ந்தார்கள் என்று கூறினால் அது மிகையில்லை. அதேநேரத்தில் தனது சொந்தங்கள் மீதும், குடும்பத்தார் மீதும் பாசம் கொண்டவராகவும் ஒவ்வொருவரது

தனிப்பட்ட தேவைகளையும், பிரச்சனைகளையும் உணர்வு பூர்வமாக அணுகி அவற்றைத் தீர்த்து வைத்து அனைவரின் நன்மதிப்பையும் பெற்றவராக இருந்தார். 2010 ஆம் ஆண்டில் கோவை வடக்கு ஆயிர வைசியர் சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்று நமது ஆயிர வைசியர் சமுதாயப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டார். இதன் பிறகு தான் முதல் முதலில் நமது முன்னாள் மாநில தலைவர் தெய்வத்திரு மணிமொழியன் அவர்களது அறிமுகம் கிடைக்கப் பெற்று இருவரிடையே மிகப்பெரிய புரிதலும், அன்பும் ஏற்பட்டு ஆயிரவைசிய சங்கத்தின் வளர்ச்சி பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது மணிமொழியன் ஐயா அவர்கள் மனதில் நினைப்பதை இவரது செயல் வடிவில் கோவையில் இருந்து செயல்படுத்தினார் என்று கூறினால் அது உண்மையாகும். மேலும் நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடத்தில் நமது சமுதாய மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு இன்னல்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடம் ஆயிரவைசிய சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டார் என்று கூறினால் அது மிகையில்லை.

நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடத்தின் அறங்காவலர்களை தேர்வு செய்வதற்கான முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்ட பிறகு அதற்காக ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு ஆயிரவைசிய சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த தன்னால் இயன்ற அளவு பாடுபட்டு வந்திருக்கிறார். இவரது எண்ணங்களில் நிறைவேறாத ஒரே குறிக்கோளாக இருப்பது - கோவை வடக்கு ஆயிர வைசியர் சங்கத்திற்காக கோவையில் ஒரு இடம் வாங்கி அதில் கட்டிடம் கட்ட வேண்டும் என்பது மட்டுமே - அவரது மிகப்பெரிய கனவாக இருந்தது. ஆயிர வைசிய சமுதாய மக்களாகிய நாம் மிகுந்த ஒற்றுமையுடன் நமது சமுதாய வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என்பது அவரது நீண்டநாள் கனவு ஆகும். அவர் பேசும் ஒவ்வொரு கூட்டங்களிலும் ஆயிர வைசிய சமுதாயம் எவ்வளவு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஒற்றுமையை உயர்த்தியே பேசி வந்திருக்கின்றார். நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து ஆயிரவைசிய சமுதாய வளர்ச்சிக்கு பாடு படுவதே ஐயா அவர்களுக்கு நாம் செலுத்தும் மிகப்பெரிய அஞ்சலியாக அமையும்.மேலும் அய்யா அவர்கள் நினைவாக கோவையில் ஆயிரவைசிய சமுதாயத்திற்கு என்று நிலையான ஒரு சொந்த கட்டிடத்தை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிப்போமாக. நன்றி...

- கோவையில் இருந்து **P.சௌந்தர்ராஜன் & P.சிவஞானம்.**
கோவை மாவட்ட ஆயிர வைசிய சங்கம், கோவை.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் கோவை எஸ். ராஜன் அவர்களின் மறைவு ஈடு செய்ய இயலாதது. அவரிடம் பழகியது சிறிது காலமெனினும் ஆயிர வைசியர்கள் மேல் அவருக்கிருந்த அளப்பரிய அன்பை எங்களால் உணர முடிந்தது. சில வாரங்களுககு முன் ஐயாவின் திருமண நாளிற்கு வாழ்த்துக்களை கூறிவிட்டு ஊடகங்களில் செய்தி வெளியிட அவர் ஏற்றிருக்கும் பொறுப்புக்களை கேட்ட பொழுது, தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் என பதிவிடுங்கள். நான் விரும்புவதும் அதுவே என அறிவுறுத்தினார். கோவை ராஜன் ஐயா அவர்கள் நம் தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மேல் வைத்திருந்த பற்று விளங்கியது. ஐயா அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறோம்.

**- இரா.அருணாசலம்**, மாநில ஊடகப்பிரிவு பொறுப்பாளர்.

**வந்ததே ஒரு நோய் தொற்று மக்கள்**
**அழிவிற்கான வித்து!**
**அதன் தாக்கம் புரியவில்லை புரிந்தும்**
**அறியாமை விலகவில்லை!**
**சுற்றித்திரிந்தார் பாரெங்கும் நோய்த்தொற்று**
**பற்றிக்கொண்டது உடலெங்கும்!**
**ஐயோ என்றோ அம்மா என்றோ கூறி**
**பயன் ஏதேனும் உண்டோ!**
**விடைபெற்று இவ்வுலகை விட்டு காண**
**கொடுப்பினை இல்லை இந்த உறவை**
**விட்டு! என்றும் எங்கள் காவலனாய்**
**காத்து நின்று எம்மை காக்க முடியா**
**பாவிகள் ஆனோமே!**
**கண் மூடும் வேளையில் உன் மனதில்**
**என்ன இருந்திருக்கக்கூடும் எண்ணி**
**எண்ணிப் பார்த்தும் கிடைத்த பதில்**
**கண்ணீர் மட்டும்!**
**இரும்புக்கரம்; அஞ்சாநெஞ்சம்;**
**அளவில்லா பாசம்; குழந்தையின் உள்ளம்;**



**நீங்கள் சென்றடைந்தது சொர்க்கம்**
**உங்கள் ஆசை மட்டுமே இங்கு மிச்சம்!**
**உடல் மட்டும் பிரிந்தது இன்று**
**உங்கள் உள்ளம் எங்களுக்கே உரியது**
**என்றும்!**

**-இப்படிக்கு குடும்பத்தார்-**

உயிரினும் மேலான ஆயிர வைசிய சொந்தங்களுக்கு கோவை எஸ்.ராஜன் குடும்பத்தாரின் அன்பான வணக்கங்கள்

ஆயிர வைசிய சமுதாயத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆயிரவைசியரையும் தனிப்பட்ட முறையில் அறிந்து, அவர்களது சுகதுக்கங்களில் தோழனாக பங்கெடுத்த எங்களின் குடும்ப தலைவர் கோவை எஸ்.ராஜன் ஐயா அவர்கள் மறைவிற்கு ஆறுதல் கூறிய, துக்கத்தில் பங்கெடுத்த அனைத்து சொந்தங்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகள்.

சற்றே தளர்ந்த மனநிலைக்கு வரும்போது உங்கள் அனைவரையும் சந்திக்கின்றோம் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் அனைவரின் மாறாத அன்பு ஒன்றே எங்களது குடும்ப தலைவர் சம்பாதித்த மிகப்பெரிய சொத்தாக எண்ணி பாதுகாக்கிறோம்.

என்றென்றும் ஆயிரவைசிய
சமுதாயப் பணிகளில்
ஒருங்கிணைந்து வாழும்

**எஸ்.ராஜன் குடும்பத்தார்,**
கணபதி, கோவை.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய கோவை எஸ். ராஜன் ஐயா அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறோம். அன்னாரை பிரிந்துவாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கம் மாநில நிர்வாகிகள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்,
**திரு. எஸ். சங்கரபாண்டியன்,**
செயல் தலைவர்,
தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கம்,

தேனி மாவட்ட ஆயிர வைசியர் சங்கம்.
தலைவர் **திரு. தவமணி**, அவர்கள்
செயலாளர், பொருளாளர், நிர்வாகிகள்
மற்றும் உறுப்பினர்கள் ஊடகப்பிரிவு

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் ஆலமரமாக விளங்கிய வரும் துணைத் தலைவரும் ஆயிர வைசியர்களின் இதயத்தில் நீங்கா இடம்பெற்ற வருமான. திரு. கோவை ராஜன் அண்ணார் அவர்களின் மறைவு தமிழ் நாடு ஆயிர வைசியர் சங்கத்திற்கும் ஆயிர வைசியர்களின் இதயதத்தில் நீங்கா இடம் பெற்றவருமான அன்னாரின் இழப்பு ஈடு செய்ய இயலாது அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் கண்ணீர் அஞ்சலியையும் விழுப்புரம், பாண்டி, கள்ளக்குறிச்சி ஆயிர வைசியர்கள் காணிக்கையாக்குகின்றனர்.

**திரு. இல. ஆனந்தன்**
ஊடகக்குழு உறுப்பினர் & கைபேசி
செயலி உறுப்பினர், விழுப்புரம்

ஆயிர வைசியருக்கு உயர்வளிக்கும் வேளையில் எங்கள் அண்ணன் கோவை இராஜன் தோன்றினார். செந்தமிழ் தேனியாய், சுறுசுறுப்புக்கு தந்தையாய், அல்லல்படும் ஆயிரவைசியரின் அருமருந்தாய், உங்களால் ஆயிர வைசியர் விழிப்புணர்வு பெற்றனர். ஆயிர வைசியர் சங்கத்தை தமிழகம் முழுவதும் கொண்டு சென்ற அண்ணா எங்கே சென்றாய்? எதுவாக இருந்தாலும் சிவா உன்னை கேட்காமல் செய்ய மாட்டேன் என்று சொன்ன அண்ணா, என்னை மட்டுமல்ல குடும்ப உறுப்பினர்களையும் ஏன் விட்டுச்சென்றாய்? ஒவ்வொரு ஆயிர வைசியனும் உனது கடமையாற்றலை பின்பற்ற வேண்டும்; உமது சேவையை தொடரவேண்டும்.

தாங்க முடியாத வேதனையில் **பேராசிரியர்**
Dr. **மு. சுப்பிரமணிய சிவா**, தலைவர்,
செயலாளர் **ஆ. சுந்தராஜ்,**
**வி.பி இராஜசேகரன்** பொருளாளர் மற்றும்
நிர்வாகிகள் திருப்பூர் மாவட்ட
ஆயிர வைசியர் சங்கம்.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் துணைத் தலைவர் திருமிகு. ராஜன் அய்யா அவர்கள் ஆற்றிய நெடுனாள் சங்கப்பணி போற்றுதலுக்குரியது.

நினைவு கூறும், **Dr. அருணாசலம்**
கல்விக்குழு உறுப்பினர்.

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய கோவை எஸ்.ராஜன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்.அன்னாரை பிரிந்துவாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தர்மபுரி மாவட்ட ஆயிர வைசியர் சங்கம் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்
**திரு. A மணிகண்டன்,** தலைவர், தர்மபுரி
மாவட்ட ஆயிர வைசியர் சங்கம்

# கோவை ராஜனும் மாநில சங்கமும்...

கோவை மாவட்ட முன்னாள் தலைவர் ராமமூர்த்தி அவர்கள் உடல் நலம் இல்லாத போது கோவை சிதம்பரம் செட்டியார், aeo பாலகிருஷ்ணன், போடிபட்டி சிவராஜன் போன்றவர்களால் மாநில சங்கத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டு சமூக தொண்டுக்கு வந்தவர்.

குறுகிய காலத்தில் தமது அரசியல் அனுபவத்தால் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தும் சேவையை சிறப்பாக செய்தவர். சாதாரண கூட்டம் போட்டு சங்கத்தை வளர்த்த நிலையை மாற்றி வெளி உலகம் தெரிந்துகொள்ளும் வண்ணம் கோவை, உடுமலை, பொள்ளாச்சியில் அரசியல் கட்சிகளின் மாநாட்டை மிஞ்சும் வண்ணம் நடத்தி காட்டியவர். சமூக மக்கள் வீடுகளுக்கு நேரடியாக சென்று அவர்களை பற்றிய விபரங்களை கேட்டு வாங்கி சங்கம் நடத்த நன்கொடையும் வாங்கி சிறப்பு செய்தவர்.

சமூகத்தவர் முகவரிகளை புத்தகமாக வெளியிட்டு ஆவணப்படுத்தினார். ராஜன் அவர்களை பார்த்து தான் மற்ற மாவட்ட நிர்வாகிகள் தாங்களும் தங்கள் மாவட்டத்தில் சங்க கூட்டங்களை அவர் நடத்தியது போல நடத்த ஆசைப்பட்டனர்.

மாநில தலைவர் திருக்குறள் செம்மலோடு நெருக்கமாக இருந்து மாநில சங்கத்தை, சமூக ஒற்றுமையை வளர்க்க அயராது பாடுபட்டார். வருடம் தோறும் 80வது,70வது வயது சமூக பெரியவர்களை பாராட்டி கௌரவித்தார். மாணவ மாணவிகளுக்கு ரொக்க பணம், நினைவு பரிசு வழங்கினார்.

சமூக கோவில் விழாக்கள், திருமணம் போன்ற விழாக்கள், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளில் சங்கம் சார்பில் தவறாது கலந்து கொண்டு வந்தார்.

சென்ற வருட கொரோனா காலத்தில் சிவஞானம், மாவட்ட தலைவர் பழனிசாமி போன்றவர்களோடு சேர்ந்து சமூக மக்களிடம் பணம் வாங்கி ஏழை சமூக மக்கள் வங்கி கணக்கில் செலுத்தி சமூக சேவை செய்தார்.

மொத்தத்தில் ஆயிர வைஸ்ய சமூகத்தில் ஒரு எழுச்சி ஊட்டியவர் என்று சொன்னால் அது முழுக்க முழுக்க உண்மையே.

அவரது இழப்பு ஆயிர வைஸ்ய சமூகத்துக்கு பெரும் இழப்பு.

**பூவுலகை விட்டு மறைந்தாலும் மக்களின் மனங்களில் அவர் என்றும் நிறைந்து இருப்பார். ஆயிர வைஸ்ய சமூகம் உள்ளளவும் அவர் பெயர் நிலைத்து இருக்கும் என்பதில் ஐயமில்லை.**

இப்படிக்கு

**திரு. V ஜெயக்குமார்,**

மாநில சங்க பொருளாளர், மதுரை



# திரு. கோவை. எஸ். ராஜன் ஐயா அவர்களின்

ஆயிர வைசிய வரலாற்றிலே, மறைந்த அமரர் உயர்திரு ராஜன் அவர்கள் பெயர் என்றும் நிலைத்திருக்கும். சமூகம் வேறு, தான் வேறு என்று பிரித்துப் பார்க்காமல் ஒன்றி செயல்பட்ட ஒப்பற்ற தலைவர் அவர். சமூக எழுச்சியிலும், ஈடுபாட்டிலும் அவர் காட்டிய வேகம் ஈடு இணையற்றது. ஒரு நிகழ்ச்சியை அமைப்பதிலும், நமது சமூகத்து மக்களை திரட்டுவதிலும், நிகழ்ச்சிகள் சிறப்பாக நடப்பதற்காக நிதி திரட்டுவதிலும் அவர் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்ட விதம் மலைக்க வைக்கிறது. கோவை மாவட்டத்தில் சங்கக் கட்டிடம் ஒன்று கட்ட வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர் செயல்பட்டார். ஆனால் அது தாமதமாகிக் கொண்டே வந்தது. மீண்டும் அதனை நாம் முனைப்புடன் முயற்சி செய்து கோவை மாநகரிலே ஒரு சமுதாயக் கூடத்தை ஏற்படுத்தலாம் என்று கேட்டுக் கொண்டேன். கொரோனா பாதிப்புகள் ஓரளவுக்கு ஓய்ந்த பின் அதனை முழு மூச்சுடன் இணைந்து பணியாற்ற முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்றார். ஆனால் ஐயகோ.. அவர் மூச்சை அந்த கொரோனா நிறுத்தி விட்டதே. அவரது மறைவு தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்துக்கு பேரிழப்பு. கோவை ஆயிரவருக்கோ வார்த்தைகளில் சொல்ல முடியாத அளவுக்கு ஏற்பட்ட பேரிடி. எந்த ஒரு விஷயத்தையும் அன்போடு அணுகி, கவனத்தைச் செலுத்தி 'காரியம் தான் பெரிசு வீரியம் பெருசல்ல' என்ற குறிக்கோளுடன் எங்கு எதை விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதை விட்டுக்கொடுத்து, எதனை சாதிக்க வேண்டுமோ அதனை சாதித்து காட்டிய தன்னேரில்லா தலைவர் அவர். அவர் நம்மிடமிருந்து மறைந்து விட்டாலும் அவரது உணர்வுகள், அவரது வேகம், அவரது ஆளுமை நம் ஆயிரவர் இடையே இரண்டறக் கலந்து என்றென்றும் ஊக்க சக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அவரது புகழ் வாழ்க... அவரது லட்சியங்கள் வெல்க.

**திரு. அரிமா ஜெய் முத்து**
**ஆர்.பழனிச்சாமி**, தலைவர், கோவை
மாவட்ட ஆயிர வைசியர் சங்கம்,

---

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் திரு.கோவை.எஸ்.ராஜன் அவர்களின் மறைவு நமக்கு ஒரு பேரிழப்பு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறேன், அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

**- இவண் தலைவர்**
**திரு. A பாலகிருஷ்ணன்**
கோவை வடக்கு
ஆயிர வைசிய சங்கம் TNAVS

---

கோவை எஸ் ராஜன் அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகிறோம். அவர்களின் குடும்பத்திற்கு எங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**- திரு. விஜயகுமார்**
வெள்ளகோவில் ஆயிர
நகர வைசியர் சேவா சங்கம்

# ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற வேண்டுகிறோம்...

மாநில சங்க துணைதலைவர் திரு எஸ். ராஜன் அவர்களின் மறைவு செய்தி கேட்டு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்., அவரது ஆன்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்தினருக்கு மன ஆறுதலை வழங்கவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம். சங்கத்திற்கு அவர் அயராது உழைத்த உழைப்பு என்றென்றும் நீங்கா நினைவில் இருக்கும். அவரை நினைத்தாலே மலர்ந்த முகமும், அதில் நிலைத்திருக்கும் புன்னகையும் நெஞ்சில் நீங்காது நிறைந்திருக்கிறது.

**இவண்**

**திருச்சி மாவட்ட ஆயிர வைசியர் சங்கம்**

கோவை மாவட்ட ஆயிர வைசிய சங்கத்தினை மாநில ஆயிர வைசியர் சங்கத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்தி சிறப்பாக வழிநடத்திச் சென்ற, ஆயிர வைசியர் சமுதாய வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற அளவு பாடுபட்ட, நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடம் ஆயிர வைசியர் கட்டுப்பாட்டில் வரவேண்டும் என்பதற்காக முழுமூச்சில் பாடுபட்ட, முன்னாள் தலைவர் தெய்வத்திரு மணிமொழியனார் ஐயா அவர்கள் வலியுறுத்திய "நம்மில் ஒற்றுமை வேண்டும் அதுவே நமது வளர்ச்சிக்கான அடிப்படை " என்ற கருத்தை வலியுறுத்தி வாழ்ந்துவந்த மாநிலத் துணைத் தலைவர் கோவை எஸ்.ராஜன் ஐயா அவர்கள் மறைவிற்கு கோவை மாவட்ட ஆயிரவைசிய சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

கோவை மாவட்ட
ஆயிரவைசிய சங்கத்தின் சார்பில்,
**உங்கள் சிவஞானம்** கோவை.

தமிழ்நாடு மாநில ஆயிரவைசிய சங்கத்தின் துணைத் தலைவர் மரியாதைக்குரிய திரு கோவை ராஜன் ஐயா அவர்களின் மறைவு செய்தி கேட்டு நாங்கள் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து விட்டோம். நமது சமுதாயத்திற்காக மிகவும் பாடுபட்டவர். ஆயிரவைசிய சமுதாயத்திற்கு சிறப்பாக சேவையாற்றும் புதிய நிர்வாகிகளை மனமார பாராட்டி ஊக்குவிக்கும் தன்மை கொண்டவர். அன்னாரின் மறைவு ஆயிர வைசிய சமுதாயத்திற்கே பெரிய இழப்பாகும். அவரது ஆன்மா சாந்தி அடையவும், அவரது குடும்பத்தாருக்கு தைரியத்தையும், மன ஆறுதலையும் வழங்கவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம். திருப்பத்தூர் மாவட்ட ஆயிரவைசிய சங்கத்தின் அனைத்து நிர்வாகிகள் சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இங்ஙனம் திருப்பத்தூர் மாவட்ட ஆயிர வைசியர் சங்கம்**

எங்களின் பாசமிக்க தலைவர் உயர்திரு கோவை எஸ். ராஜன் அவர்கள் மறைவு கேட்டு மிகுந்த வேதனை அடைகிறோம். அவரை பிரிந்து வாடும் குடும்பத்தார்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம் அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

- இவண் கோவை வடக்கு
ஆயிர வைசிய சங்கம் TNAVS
**திரு. அரிமா முத்து R பழனிசாமி**
தலைமை ஆலோசகர்,
**திரு. A.பாலகிருஷ்ணன்** தலைவர்,
**திரு. K.தாமோதரசாமி** செயலாளர்,
**திரு. C.ராஜேந்தரன்** பொருளாளர்,
**திரு. R.செல்வராஜன்** இணைச்செயலாளர்,
**திரு. K.ஜெகதீசன்** அமைப்பாளர்

நமது சங்கத்தின் மாநில துணை தலைவர் மறைந்தார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியாக உள்ளது, சிம்ம குரலோன் எஸ். ராஜன் மறைவு நமது சங்கத்திறகு ஈடு செய்ய முடியாத இழப்பு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறேன், அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

**- C.ரமேஷ்,** கடலூர்

பொள்ளாச்சி, உடுமலை, திருப்பூர் என்று மாநாடுகளை நடத்தி, ஆயிர வைசிய சமுதாய மக்களை ஒற்றுமைப்படுத்திய சமுதாயப் போராளி, நமது மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர், மாநிலத் துணைத் தலைவர் அண்ணன் கோவை திரு. ராஜன் அவர்கள் மறைவை கேட்டு எண்ணில்லா துயரம் அடைந்தோம், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

**- பொள்ளாச்சி ஆயிர வைசியர் இளைஞர் சங்கம், ஆயிர வைசியர் டிரஸ்ட், ஆயிர வைசியர் டிவி**

---

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய கோவை S.ராஜன் ஐயா அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன் **R. சங்கர்**
தமிழ்நாடு ஆயிர வைசிய சங்க
மாநில துணை செயலாளர், கோவில்பட்டி

---

தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கோவை ராஜன் ஐயா அவர்கள் மறைவு நமது சங்கத்திற்கு பேரிழப்பாகும். அண்ணாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடியில் மெய்ப்பொருள் காண வேண்டுகிறோம்.

**- மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர், மாவட்ட கல்வியாளர்கள், மாநில கல்விக்குழு உறுப்பினர்கள்.**

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரும் மதிப்பிற்குரிய கோவை S.ராஜன் ஐயா அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்பதை அறிந்து ஆழ்ந்த வருத்தமுற்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறோம். அன்னாரை பிரிந்துவாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை திண்டுக்கல் மாவட்ட ஆயிர வைசியர் மக்கள் நல சங்கம் மற்றும் பழனி வட்டார ஆயிர வைசியர் சங்கம் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆழ்ந்த வருத்தங்களுடன்**
**M.தேக்கமலை செட்டியார்.**
மாவட்டத் தலைவர்,
**T.சக்திவேல் செட்டியார்.**
மாவட்ட செயலாளர். **N.மணிவேல் செட்டியார்.** ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிர்வாகக் குழுவினர்.
திண்டுக்கல் மாவட்ட ஆயிர வைசியர் மக்கள் நலசங்கம்
**வி.ரமேஷ் ராம்,** தலைவர் பழனி வட்டார ஆயிர வைசியர் சங்கம்

---

என்னுடைய நெருங்கிய உறவினரும், நண்பர் போல் பழகிய வருமான ராஜன் அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார் என்று அறிய மிகவும் வேதனைப்படுகிறேன். அவருடைய மறைவு எனக்கு தனிப்பட்ட முறையிலும், சமுதாயத்திற்கும் ஒரு பெரும் இழப்பு. அவருடைய ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

**- விருப்பாட்சி. டாக்டர். ராமகிருஷ்ணன்**
மாநில துணைத் தலைவர்

எனது மதிப்பிற்குரிய தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கோவை ராஜன் அவர்கள் மறைவு செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற வேண்டுகிறேன். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு இறைவன் அதை தாங்கும் சக்தியை அளிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்கிறேன்.

**- திரு. K. ஜெகநாதன்**, இயக்குனர்,
விநாயகா மிஷன் நிகர்நிலைப்
பல்கலைக்கழகம், சேலம்

வணக்கம், மதிப்புக்குரிய திரு கோவை ராஜன் அவர்கள் காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. அண்ணார் அவர்கள் நம் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் அளவிட முடியாது. அண்ணார் அவர்களை பிரிந்து வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். தென்னாற்காடு மாவட்ட அயிரவைசிய சங்க மக்களின் சார்பிலும், நெரிஞ்சிப்பேட்டை முன்னாள் அறங்காவலர் சார்பிலும் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன் ஓம் சாந்தி ஓம்

**- திரு.எஸ்.ஆர்.ராமனாதன்**
கடலூர், முன்னாள் அறங்காவலர்

தமிழ் நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் துணை தலைவர் மற்றும் கோவை மாவட்ட வடக்கு ஆயிரவைசியர் சங்கத்தின் தலைவர் மற்றும் பண்பாளரும், பணியாளரும், பழகுவதற்கு நல் உறவாக விளங்கி அனைவரது நெஞ்சில் நீங்கா இடம்பெற்ற பெருமகனார் கோவை திரு. இராஜன் ஐயா மறைவு நமது சமூகத்திற்கு பேரிழப்பாகும், அவரது ஆத்துமா சாந்திடைய இறைவனை பிராத்திக்கிறோம்.

**- ஆயிர வைசியர் சங்கம்,**
**மயிலாடுதுறை மாவட்டம்.**

நமது சங்கத்தின் துணை தலைவரின் செய்தி அதிர்ச்சி ஆக உள்ளது. அவரின் ஆத்மா இறைவனிடத்தில் சாந்தி அடைய வேண்டுகிறேன்.

**- திரு. பாண்டுரெங்கன்**, மதுரை

தமிழ்நாடு ஆயிர வைசிய சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கோவை ராஜன் ஐயா அவர்கள் மறைவு நமது சங்கத்திற்கு பேரிழப்பாகும். குறுகிய காலத்தில் மாநாடுகளை நடத்தி ஆயிரவரின் கல்வி செம்மல் விநாயகா மிஷன் பல்கலைக்கழக நிறுவனர் தெய்வத்திரு Dr. A..சண்முகசுந்தரம், மற்றும் தெய்வத்திரு திருக்குறள் செம்மல் மணிமொழியனார்ஆகியோரின் பாசத்திற்கும் அன்பிற்கும் பாத்திரமானார். மாநிலச் சங்கத்தின் நிதி நிலைமையை சீர்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நிதிக்குழு ஏற்படுத்தப்பட்டு அதற்கு தலைமை வகித்து மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிதி திரட்டிக் கொடுத்தார். மாநிலத் தலைவர் Dr. A. S. கணேசன் அவர்களின் வழிகாட்டுதலின் படி நெரிஞ்சிப்பேட்டை திருமடத்தின் அனைத்து நடவடிக்கைக்கும் மாநிலச் சங்க நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பாக செயல்பட்டார். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட சங்க நிர்வாகிகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு நமது மாவட்ட சங்க பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தார். அண்ணாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடியில் மெய்ப்பொருள் காண வேண்டுகிறேன்.

கனத்த இதயத்தோடும், கண்ணீரோடும்
**திரு. சக்தி சக்கரவர்த்தி,**
மாநில துணை செயலாளர் சேலம்

தலைவர் என்பதற்கு இலக்கணம், சொந்தங்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதில் மாறாத ஈடுபாடுகொண்ட நமது சமுதாய முத்து கோவை எஸ் ராஜன் ஐயா அவர்கள் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன். ஐயா அவர்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

**- திரு. P.சௌந்தர்ராஜன்,**
கோவை மாவட்டத் துணைத் தலைவர்,
தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கம்.

# திருப்பூர் மாவட்ட ஆயிர வைசியர் சங்கத்தின் இரங்கல் கூட்டம்...

தமிழ்நாடுஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த திருப்பூர் கோவை மாவட்ட ஆயிர வைசியர் சங்கத்தின் தலைவராகவும், கல்விக் கண் திறந்த காமராஜரின் தொண்டனாகவும், ஆயிர வைசியர்களை ஒருங்கிணைப்பு செய்து கோவை பொள்ளாச்சி உடுமலையில் மாநாடுகளை நடத்தியவருமான ஆருயிர் தலைவர் கோவை எஸ் இராஜன் மற்றும் வடக்கு ஆயிரவைசியர் சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வரும் எங்கள் அன்பு அண்ணன் சௌந்தரராஜன் அவர்களின் துணைவியார் புஷ்பா அவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் பேராசிரியர் டாக்டர். மு. சுப்பிரமணிய சிவா, அ. சுந்தரராஜ் பெதப்பமபட்டி லட்சுமணன் செட்டியார், போடி பட்டி இந்திரன், துங்காவி ராஜேந்திரன், கருணாகரன், உடுமலை பழனிச்சாமி செட்டியார், கோட்டமங்கலம குமாரசாமி, பாரத வங்கி நடராஜன் மற்றும் ஆயிர வைசிய பெருமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**வாழ்க இராஜன் அவர்களின் புகழ்...**

## கோவை திருவாளர் ராஜன் ஐயா அவர்களின் நினைவஞ்சலி ...

பண்பால்
அன்பால்
மனத்தால்
குணத்தால்
நீங்கா
இடம் பிடித்தார்
நம்மனத்தில்
கோவை திரு.ராஜன் ஐயா
நினைவுக்கு
என்றும்
மறைவு இல்லை
நீங்கா நினைவுகள்
நம்மனத்தில்...

– **திருமதி பிரபாவதி செந்தில்குமார்**
*திருச்செங்கோடு ஆயிர வைசிய நகரச்செட்டியார் மண்டபத்தில் மகளிர் குழு நிர்வாக கமிட்டி உறுப்பினர்*

தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் திரு.கோவை.எஸ்.ராஜன் அவர்களின் மறைவு நமக்கு ஒரு பேரிழப்பு.அவரது பணிகளும் ஆலோசனைகளும் யாராலும் ஈடு செய்ய முடியாதது. கடைசியாக அவர் சேலம் கூட்டத்தில் பேசிய நிகழ்ச்சி இன்னும் எங்கள் மனதில் நீங்காமல் உள்ளது.அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
**திரு. எ.வி.சேகர்,** மாநில துணை தலைவர்
**திரு. வி.ராதாகிருஷ்ணன்,** செயலாளர்.
திருவள்ளூர் மாவட்டம்.

பண்பாளரும், பணிவாளரும் பழகுவதற்கு நல் உறவாளருமாக விளங்கி அனைவரது நெஞ்சிலும், நினைவிலும் நீக்கமற நிறைந்து நின்ற பெருமகனார் கோவை திரு. ராஜன் ஐயா அவர்கள் மறைவு நம் சமூகத்திற்கே பேரிழப்பாகும்.நமது நெருங்சிப்பேட்டை திருமடத்தை திரும்ப அடைய மனமாச்சரியங்ளை மறந்து நாம் அனைவரும் ஒன்று பட்டு ஓரணியாக நிற்க வேண்டும் என்று அயராது முயற்சித்த அவரது முயற்சி நிறைவேறவும், அவரது ஆத்மா சாந்தியடையவும் இறையருளை பிரார்த்திக்கிறேன்.

**– ஆடிட்டர் திரு. லோகநாதன்,** திருப்பூர்.

ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில துணை தலைவர் கோவை S. ராஜன் அவர்களின் எதிர் பாராத மறைவு எல்லோருக்கும் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்சமயம் ஆஸ்திரேலியாவில் பெர்த் நகரத்தில் இருக்கும் நான் கண்ணீருடன் என் வருத்தத்தை Zoom கூட்டத்தில் எல்லோருடனும் பகிர்ந்து கொண்டேன். அன்று என்னால் அதிகம் பேச முடியவில்லை ஆதலால் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கோவை மாவட்ட தலைவர் திரு. அரிமா ஜெய் முத்து R.பழனிசாமி அவர்களுக்கு என் வேண்டுகோள் நம் தலைவர் S.ராஜன் அவர்கள் சிறந்த செயல் வீரர், சாதனையாளர். அவருடைய செயல்பாட்டில் ஒன்று கோவை மாவட்ட ஆயிர வைசியர் சங்கத்திற்கு ஒரு இடம் வாங்கி கட்டிடம் கட்ட வேண்டும் என்பதே. அதற்காக தீவிர முயற்சி செய்து வந்தார். ஆனால் அது கால தாமதம் ஏற்பட்டு அவருடைய காலத்தில் நிறைவேறாமல் போய் விட்டது. அந்த திட்டத்தை கோவை மாவட்ட ஆயிர வைசியர் சங்க தலைவர் எடுத்து கூடிய விரைவில் செயல் படுத்தினால் அவருடைய ஆன்மா சாந்தி அடையும். மேலும் அந்த கட்டிடத்துக்கு அவருடைய பெயரை வைத்தால் அது அவருக்கு நாம் செய்யும் நினைவு அஞ்சலி ஆகும். தெய்வத்திரு S. ராஜன் நினைவு மண்டபம் (Talaivar S.Rajan Memorial Hall) என்று வைக்கலாம். **இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் மற்றும் வேண்டுகோள்.**

**திரு. K. ஜெகதீசன், Perth Australia,**
**அமைப்பாளர், கோவை வடக்கு ஆயிர வைசியர் சங்கம்.**

ஆயிர வைசியன்
சமூக மாத இதழ்
ஆசிரியர்
டாக்டர். A. S. கணேசன்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல் - குறள்



திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் அவர்களுடன்
திரு. கோவை. எஸ். ராஜன் அவர்கள்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - குறள்

அன்பு - 42 / ஏப்ரல் 2021 / ஒளி - 10

'ஒற்றுமையே பலம்; மனித நேயமே வெற்றி'

www.ayiravaisya.com